## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## MCOP.No. 128/2021

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் புதன்கிழமை **ம.சா.2** -ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. இராஜகோபால் | **வட்டம்** | |
| **த.பெ** | | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

**முதல் விசாரணை :**

நான் இந்த நம்பர் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். வாகன விபத்தில் இறந்துபோன சுப்பையா பெயரில் உள்ள சொத்துக்கள் மேற்படி இறந்த பிறகு 3,4 மனுதார்களுக்கு பட்டா மாறுதல் செய்த உத்திரவு கணினி நகல் **ம.சா.ஆ.15,** பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தில் 2020-2021ல் இறந்த சுப்பையா விவசாயம் செய்ததற்கான VAO விடம் பதிவு செய்த ஆவணம் அசல் **ம.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து கொல்லங்குடி – காளையார்கோவில் ரோட்டில் கொல்லங்குடி பள்ளிக்கு அருகில் ஒரு வளைவில் விபத்து நடந்தது என்றால் சரிதான். இறந்து போனவரின் வயது என்ன என்றால் 69. இறந்து போனவருக்கு உடல் நல பாதிப்பு இருந்தது என்றால்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.08 16:34:28 +0530

இல்லை. இறந்து போனவர் எத்தனை பால் மாடுகள் வைத்து இருந்தார் என்றால் 4 மாடுகள். அந்த மாடுகள் ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் கரந்தது என்றால் நான்கு மாடுகள் சேர்ந்து 8 லிட்டர். பால் சொசைட்டிக்கு ஊற்றுவேனா வேறு எங்கு ஊற்றுவேன் என்றால் சொசைட்டியில் ஊற்றுவேன். சொசைட்டியில் பால் ஊற்றுவதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தற்போதும் அந்த மாடுகள் இருக்கிறதா என்றால் இல்லை. விவசாய நிலம் நஞ்சை நிலமா புஞ்சை நிலமா என்றால் நஞ்சை 4 ஏக்கர். அதில் என்ன விவசாயம் செய்வார்கள் என்றால் நெல் விவசாயம். அதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். விவசாயத்தில் மாதம் ரூ.30000/- வருமானம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இறந்து போனவர் விவசாயம் செய்து வருமானம் ஈட்ட வில்லை என்றும் அவர் வயதாகி உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. விபத்து நடந்த வாகனத்திற்கு ஆர்.சி ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த வண்டிக்கு காப்பீடு இருந்ததா என்றால் இருந்தது. காப்பீடு நிறுவனத்தை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் காவல் ஆய்வாளர் வாங்கிக் கொண்டார்.

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2026.04.08 16:34:39 +0530

## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## MCOP.No. 128/2021

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் புதன்கிழமை **ம.சா.3**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. கோபால் | **வட்டம்** | |
| **த.பெ** | | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

**முதல் விசாரணை :**

நான் இந்த நம்பர் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து கிழமேல் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வளைவு இருந்தது என்றால் சரிதான். நான் எங்கிருந்து வந்தேன் என்றால் காளையார்கோவிலிருந்து கொல்லங்குடி வந்தேன். போஸ்ட் ஆபிஸ் வண்டி எங்கிருந்து வந்தது என்றால் காளையார்கோவிலிருந்து சிவகங்கை பக்கம் போய் கொண்டிருந்தது. விபத்து ஏற்பட்ட வண்டி எதிர்திசையில் போனது என்றால் சரிதான். சம்பவ விபத்தில் வளைவில் TVS XL வண்டியில் வந்தவர் முன்னாள் சென்ற வண்டியை முந்தி சென்று போஸ்ட் ஆபீஸ் வண்டியில் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. வளைவில் போஸ்ட் ஆபீஸ் வண்டி வேகமாக போகவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த நாள் தேதி நேரம் என்னவென்றால் 27.07.2021. காலை 07.30–08.00 மணி. இறந்து

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.08 16:34:49 +0530

போனவர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். தலைகாயத்தில் தான் இறந்தார் என்றால் சரிதான். உண்மையில் தலை கவசம் போட்டிருந்தால் தலைகாயம் ஏற்பட்டு இறந்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. விபத்தை நான் எங்கு இருந்து பார்த்தேன் என்றால் 20 அடி துாரத்தில் எதிர் திசையில் இருந்து பார்த்தேன். இறந்து போனவர் என் உறவினர் என்றால் இல்லை, ஊர்க்காரர். என் ஊர்க்காரர் பழக்கப்பட்டவர் என்பதால் சம்பவத்தை பார்க்காமலேயே பொய் சாட்சி சொல்கிறேனா என்றால் சரியல்ல.

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2026.04.08 16:35:00 +0530